### விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் – உரப் பற்றாக்குறையைத் தவிர்த்திட

# தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய உரங்களை விரைந்து வழங்கிடுவீர்!

## பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை!

சென்னை, செப்.18

**விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் உரப் பற்றாக்குறையைத் தவிர்த்திட தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய உரங்களை விரைந்து வழங்கிட நடவடிக்கை எடுக்கக்கோரி பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.**



அதன் விவரம் வருமாறு:-

நாட்டின் முக்கியமான நெல் உற்பத்தி மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். மாநிலத்தில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. விவசாய உற்பத்தியை அதிகரிக்க ஊக்கமளிக்கும் வகையில் குறிப்பான பகுதிக்கு ஏற்ப திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அத்துடன், தேவை யான வேளாண் இடுபொருட்கள் கிடைப்பதையும் சீராக கண்காணித்தும் வருகிறது.

பருவமழை முன்கூட்டியே தொடங்குவதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் 2025 ஜூன் மாதம் முதல் காரிப் பருவத்தில் நெற்பயிர் முழுவீச்சில் பயிரிடப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி, 5.661 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்தில் பயிரிடப்பட்ட 5.136 லட்சம் ஹெக்டேர் பரப்பளவை விட 0.525 லட்சம் ஹெக்டேர் (10%) அதிகமாகும். இதனால் மாநிலம் முழுவதும் நேரடி உரங்களுக்கு அதிகத் தேவை நிலவுகிறது.

மாநிலத்தில் பெய்துவரும் பரவலான மழை மற்றும் முக்கிய நீர்த்தேக்கங்களில் தண்ணீர் போதுமான அளவில் உள்ளதன் காரணமாக, விவசாய உற்பத்திக்குத் தேவைப்படும் யூரியா, டிஏபி, எம்ஓபி மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்களை உற்பத்தியாளர்களால் இந்திய அரசின் வழங்கல் திட்டத்தின்படி 2025 ஏப்ரல் முதல் 2025 ஆகஸ்ட் வரை வழங்கிட வில்லை. மேலும் அவர்களால் மொத்த ஒதுக்கீட்டில் சுமார் 57 விழுக்காடு அளவிற்கு மட்டும்தான் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள் நிறுவன வாரியாக இதுவரை உரங்கள் வழங்கப்பட்ட விவரங்களைப் பட்டியலிட்டுள்ளார்.

இந்த நிலையில், தமிழ்நாட்டின் தற்போதைய காரிப் மற்றும் எதிர்வரும் ராபி பருவத்திற்கு, உரப் பற்றாக்குறையை தவிர்த்திடும் வகையில், தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவேண்டிய 27,823 மெட்ரிக் டன் யூரியா, 15,831 மெட்ரிக் டன் டிஏபி, 12,422 மெட்ரிக் டன் எம்ஓபி மற்றும் 98,623 மெட்ரிக் டன் என்பிகே காம்ப்ளக்ஸ் உரங்களை உடனடியாக வழங்கிடத் தேவையான அறிவுரைகளை இரசாயன மற்றும் உர அமைச்சகத்திற்கு வழங்கிடுமாறு இந்தியப் பிரதமர் அவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

### சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்ட அரங்கில்

# அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சேலம், செப். 18 –

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (16.9.2025) சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களான மகளிர் விடியல் பயணத்திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண், தமிழ்புதல்வன், முதல்வ ரின் முகவரி, மக்களுடன் முதல்வர், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், கலைஞர் கனவு இல்லம், மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், நலம் காக்கும் ஸ்டாலின், குடிநீர் திட்டப் பணிகள், சாலை மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட அனைத்து துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் அரசுக்கு நிச்சயம் ஒரு நல்ல பெயரை பெற்றுத் தரும் என்பதை மனதில் வைத்து, மனுக்களை கவனமாக கையாண்டு அரசுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் நற்பெயரை பெற்றுத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். சேலம் மாவட்டத்தை பொறுத்தவரைக்கும், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் திட்டமிட்டபடி பாதிக்கும் மேல் முடிவடைந்துள்ளது. 45 நாட்களுக்குள் மனுக்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும். அதேபோல கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் அதிக மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை கவனமாக பரிசீலித்து அவற்றிற்கும் விரைவாக தீர்வு காண வேண்டும் என்று நான் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கின்றேன்.

‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத்தில் வாரத்திற்கு ஒன்று, ஒன்றுக்கு மேற்பட்ட முகாம்களை நடத்தி மக்களுக்கு மருத்துவ சேவை கிடைப்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

கலைஞர் விளையாட்டு உபகரணங்களை அனைத்து ஊராட்சிகளிலும் விளையாட்டு உபகரணங்கள் கேட்பவர்களுக்கு வழங்கி அந்த பதிவேடுகளை பராமரித்து அந்த செயலியையும் சரியாகப் பயன்படுத்துமாறு நீங்கள் எல்லோரும் வலியுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பூமாலை வணிக வளாகம் செயல்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஆட்சித் தலைவர் அவர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நம்முடைய அரசு விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், காலை உணவுத் திட்டம் என பல முத்திரை திட்டங்களை தீட்டி மக்களிடம் ஒரு நற்பெயரை பெற்றுள்ளது.

அதேபோல குடிநீர், சாலை பராமரிப்பு, மின்விளக்கு போன்ற அடிப்படை தேவைகளை குறித்து மக்களுடைய கோரிக்கைகளை தாமதமின்றி தரமாக நிறை வேற்றி தருவது நாம் அனைவருடைய கடமை. இதை மனதில் வைத்து நீங்கள் எல்லோரும் செயல்பட வேண்டும் என்று உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தீட்டும் திட்டங்களை கொண்டு சென்று சேர்ப்பவர்கள் வந்திருக்கக் கூடிய அரசு அலுவலர்களாகிய நீங்கள் தான். அரசுக்கும் மக்களுக்குமான ஒரு பாலமாக இருந்து, நம்முடைய திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்று சேர்வதை உறுதி செய்வதை உங்களை எல்லாம் மீண்டும் கேட்டுக் கொண்டு, முதலமைச்சர் அவர்களுக்கு நற்பெயரை பெற்றுத் தருகின்ற பொறுப்பை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம். செல்வகணபதி, ஆ. மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், துணை மேயர் திருமதி மா. சாரதாதேவி, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் மரு.ச.உமா, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநகர காவல் ஆணையாளர் அனில் குமார் கிரி, காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### நீறுகளை ஊதி

# நெருப்பை அடையாளம் காட்டிய சுற்றுப்பயணச் சூறாவளி!

## தந்தை பெரியாருக்கு – கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!



உன் தாடி முளைத்தபோது
சமூகத்துக்கு
மீசை முளைத்தது

இருட்டுச் சுவர்
இடியத் தொடங்கியது

கி.மு கி.பி பழைய கணக்கு
பெ.மு பெ.பி புதிய கணக்கு

நூற்றாண்டுகளாய்
எங்கள் புலிகள்
ஆடுகளுக்குப்
புல்பறித்துக் கொண்டும்
பல்தேய்த்துக் கொண்டுமிருந்தன

நகத்தில் கூர்மையும்
முகத்தில் மீசையும்
உண்டென்பதை
புலிகளுக்கு நீதான்
புலப்படுத்தினாய்

நீறுகளை ஊதி
நெருப்பை அடையாளம்காட்டிய
சுற்றுப்பயணச் சூறாவளி நீ

வர்க்கப் போரின்
இன்னோர் வடிவம்
உன் தர்க்கப்போர்

நீ சொன்ன பிறகுதான்
செருப்புத் தைத்தவன்
கையில் இருந்ததைக்
காலில் அணிந்தான்

நிர்வாணமாய்
நெசவு செய்தவன்
ஆடை சூடினான்

கலப்பையில் எழுதியவன்
காகிதத்தில் எழுதினான்

சூரியன் வந்ததும்
உடுக்கள் என்னும்
வடுக்கள் மறைவதுபோல்
உன் வருகையால்
வெள்ளை அழுக்கு
வெள்ளாவிவைத்து
வெளுக்கப்பட்டது

பழைமைவாதப் பாம்படித்ததும்
ஓலைக் குடிசைகளின்
ஒட்டடை அடித்ததும்
புலம்பும் புராணங்களுக்கெதிராய்ச்
சிலம்பம் சுற்றியதும்
உனது ஒற்றைக் கைத்தடிதான்

மூலக்கூறு பிரித்தால்
கடைசிவரை
தங்கம் தங்கம்தான்

உன் மரணத்தின்
முன் நிமிடம்வரை
நீ பேசும்புயல்தான்; பெரியார்தான்

கருப்பு நிலக்கரி வைரமாகக்
காலம் ஆகும்
கருப்பு வண்ணம் புரிதல்பெற
இன்னும் ஒரு யுகமாகும்

புகழ் வணக்கம்.



– கவிப்பேரரசு
வைரமுத்து

---



முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றோரை இழந்து பராமரிக்க இயலாத குழந்தைகளுக்கு 18வயது வரை மாதம் ரூ.2ஆயிரம் உதவிதொகை வழங்கும் ‘அன்பு கரங்கள்’ திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து வேலூர் மாவட்டத்தில் பயனடைய உள்ள 177 குழந்தைகளுக்கு அடையாள அட்டை மற்றும் கல்வி உபகரணங்களை மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகர மாணவர் அணி செயலாளர் அருண்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

# சேலம் மாவட்டத்தில் 17 புதிய பேருந்துகளை துவக்கி வைத்தார்!

சேலம், செப். 18-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.9.2025) சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சேலம் கோட்டத்தின் சார்பில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்பாட்டிற்காக 12 புதிய தாழ்தளப் பேருந்துகள் (LOW FLOOR VEHICLE) மற்றும் 5 புதிய நகர BS6 மகளிர் விடியல் பயணம் செய்யும் பேருந்துகளைக் கொடியசைத்துத் துவக்கி வைத்தார். மேலும், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், மகளிர் மற்றும் பொது மக்கள் பயன் பெறும் வகையில் 2 நகரப் பேருந்துகள் வழித்தட மாற்றம் செய்தும், 8 நகரப் பேருந்துகள் வழித்தட நீட்டிப்பு செய்தும். 1 நகரப் பேருந்து மூலம் கூடுதல் பேருந்து வசதியும் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம். செல்வகணபதி, ஆ.மணி, கே.இ.பிரகாஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் வெ.குணசேகரன், பொது மேலாளர் (தொழில்நுட்பம்) பா.கோபாலகிருஷ்ணன், பொது மேலாளர் (சேலம்) த.மோகன்குமார், முதுநிலை துணை மேலாளர் (மனிதவள மேம்பாடு) க.ராஜராஜன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.